அலவன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. சுகாதார துப்புரவாளர்கள் சில தெருக்களில் மட்டும் பணி புரிவதால் சைக்கிள் அலவன்ஸ் வழங்கப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சைக்கிள் இருக்கிறவர்களுக்கு இந்த சைக்கிள் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா? சைக்கிள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லோருக்கும் சைக்கிள் அலவன்ஸ் உண்டா? சைக்கிள் வாங்க முடியாதவர்களுக்குக் கடன் கொடுத்து சைக்கிள் வாங்கித் தர ஏதாவது வசதி செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சைக்கிளில் போய் மேற்பார்வை செய்கிறவர்களுக்கு இந்த அலவன்ஸ் தரப்படுகிறது. இதற்கும் சைக்கிள் வாங்குவதற்கும் சம்பந்தம் இல்லை.

வந்தவாசி ஒன்றியத்தில் நன்கொடை வசூல்.

* 183 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974-75-ம் ஆண்டில் வந்தவாசி (வ.ஆ.) ஊராட்சி ஒன்றியம், அதன் ஊராட்சித் தலைவர்களிடமிருந்து நன்கொடைகள் வசூலித்து உள்ளதா?

(இ) ஆம் எனில், எதற்காக எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்திற்காக, வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த 58 ஊராட்சித் தலைவர்களிடமிருந்து அவர்கள் அலுவல் பொறுப்பில் **(Official capacity)** ஊராட்சி ஒன்றுக்கு ரூ. 100 விதம் மொத்தம் ரூ. 5,800 மாவட்ட ஆட்சியரால் வசூலிக்கப்பட்டது.

அரிசன நலப் பள்ளிகளில் பணியாற்றும் இளநிலை ஆசிரியர்கள்.

* 184 வினா—**திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசன நலத்துறை தொடக்கப்பள்ளிகளில் ஹையர்கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றும் செகண்டரி கிரேடு படித்த ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு பதவிகள் கொடுக்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?